www.padippakam.com

# சிறை மீண்ட, மீளவுள்ள தோழர்களுக்காக
# நிதி உதவி அளிப்பீர்

அருமைத் தோழர்களே! அன்பான பொதுமக்களே!

"பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்" "தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்" அமைப்புக்கள், இலங்கையில் நடந்து வரும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தினூடாக உருவாகி வளர்ந்து வருவதை அறிவீர்கள். தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இன்றைய நிலையில் தமிழீழத்திற்கான போராக நடந்து வருகிறது. போராட்டமும் – போரும் புரட்சிகர தேசபக்த பாதையில் மேலும் முன்னேற வேண்டியுள்ளது. இதன்மூலம் மட்டும் தான், இதுவரை காலம் தாய் மண்ணில் கடலில் சிந்தப்பட்ட இரத்தங்களுக்கும் எல்லா இழப்புக்கள் தியாகங்களுக்கும் மதிப்பளிக்க முடியும். மக்களின் விடுதலையும் – தேசத்தின் சுதந்திரமும் ஒன்று சேர வளர்ந்து வெற்றிபெறமுடியும்.

"நவசகாப்தம்" "தேசபக்தன்" வெளியீடுகள் மூலம் தேசியவிடுதலைப் போராட்டத்தின் சரியான திசைவழியை இவ்வமைப்பு முன்வைத்து வருகிறது. இதற்காக போராளிகள் மத்தியில் ஒரு சித்தாந்தங்கள் அரசியல் போராட்டத்தையும், புரட்சிகர அமைப்பு உத்வேகத்தையும் தட்டியெழுப்பிவருகிறது.

1987ல் உருவான நமது அமைப்புக்கள், ஆரம்பத்தில் எல்லா புரட்சிகர இயக்கங்கள் போலவே சித்தாந்த அரசியல் அறிவு முதிர்ச்சி இன்மை, அனுபவகுறைவால் சில இடது அதிதீவிரவாத தவறுகளைச் செய்தோம், இதனால் பலத்த இழப்புக்களுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளானோம், பல தோழர்கள் நீண்டகால சிறைவாச கொடுமைகளை ஏற்கவேண்டிவந்தது. ஆதரவாளர்கள் அரசால், அராஜக இயக்கங்களால் அச்சுறுத்தப்பட்டன. பின்னர் எமது அரசியல் அமைப்பு நடைமுறைகளில் வெளிப்பட்ட குட்டிமுதலாளிய – அதிதீவிரவாத தவறுகளை மக்கள்முன் பகிரங்கமாக சுயவிமர்சனம் செய்து கொண்டோம், சரியான அரசியல் அமைப்பு வழிகளைமுன்வைத்து, நடைமுறையில் முன்னேறி வருகிறோம்.

அதேவேளை நீண்டகால சிறை வாசத்தின் பின்சில தோழர்கள் விடுதலையாகி உள்ளனர். சிலர் விடுதலையை எதிர்காத்திருக்கிறனர் பல இழப்புக்களுக்கு ஆளாகி, துன்ப துயரங்களை எதிர் கொண்டு விட்டு வெளியே வந்துள்ள வரவுள்ள அந்த தோழர்களின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. உடனடி வாழ்க்கையை பாதுகாக்க வேண்டியுள்ளதுடன் அவர்களை புரட்சிகர இயக்க போக்குடன் சரியான முறையில் அய்க்கியப்படுத்தி அரவணைத்து செல்லவேண்டியது நமது கடமையாகும் இதை நீங்கள் உணர்வு பூர்வமாக புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம்.

தமிழீழ போராட்டம் – போர் மேலும் மேலும் சரியான புரட்சிகர தேசபக்த பாதையில் முன்னேற வேண்டும் என விரும்பும் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் இந்த தோழர்களுக்காக நிதி உதவி அளிப்பதை தங்களின் அவசரக் கடமையாக கருதி உங்களின் உயர்ந்தபட்ச உதவியை வழங்க முன்வருமாறு அறைகூவி அழைக்கிறோம்.

அவர்களுக்கு தரப்படுகின்ற உதவி ஏதோ தனி மனிதர்களுக்கு தரப்படுகின்ற உதவி அல்ல, இது தமிழீழ புரட்சிகர தேசபக்த இயக்கத்தை மேலும் வலிமையோடு வளர்த்தெடுப்பதற்கு, தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கையை வென்றெடுப்பதற்கு நீங்கள் செலுத்தும் "தேசபக்த" பங்களிப்பும், ஆதரவுமாகும்.

இதுவரை நமது அமைப்புக்களின் வளர்ச்சிக்கு நீங்கள் அளித்து வரும் இத்தகைய உதவிகளால் தான் நெருக்கடி மிகுந்த இந்த காலத்தில் நேரத்திலும் கூட எமது புரட்சிகர பயணத்தை தொடரமுடிகிறது.

**தோழர்களே ! பொதுமக்களே ! நண்பர்களே ! முன்வாருங்கள்**

**சிறைமீண்ட – மீளவுள்ள தோழர்களுக்காக தாராளமாக**
**நிதி உதவியை வாரி வழங்குங்கள்**

**பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்**
**தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்**

படிப்பகம்